கோடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கோடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635
# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்
NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 130 | 15-11-2025 | சனி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 130 | 15-11-2025 | Saturday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

# 'எஸ்ஐஆரை ஆதரித்து அதிமுக உச்ச நீதிமன்றம் சென்றது வெட்கக் கேடு': முதல்வர் ஸ்டாலின்



சென்னை: நவ. 15–

"தங்களது கட்சியை டெல்லியில் அடமானம் வைத்துவிட்டு, தற்போது எஸ்ஐஆரை ஆதரித்து வருகிறது அதிமுக. இது வெட்கக் கேடு" என கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி பாக முகவர்கள் மற்றும் நிர்வாகிகள் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கொளத்தூர்தொகுதியில் நடைபெற்ற "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" என்ற தலைப்பில் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட வாக்குச்சாவடி பாக முகவர்கள் மற்றும் நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்துகொண்டு முதல்வர் ஸ்டாலின் உரையாற்றினார்.

அப்போது அவர் பேசும்போது, "இன்றைக்கு நாம் எங்கு சென்றாலும் எஸ்ஐஆர்பற்றித்தான்பேசிக் கொண்டிருக் கிறார்கள். எனவே, அதைப் பேசாமல் இருக்க முடியாது என்கிற சூழ்நிலைஏற்பட்டிருக்கிறது. மக்கள் ஒவ்வொருவரும், 'நாங்கள் இந்திய குடிமக்கள்தான்' என்று நிரூபிக்க வேண்டிய சூழ்நிலையில்,கட்டாயத்தில் இருந்துகொண்டிருக்கிறோம். காரணம், தேர்தல் ஆணையம்அப்படிப்பட்ட ஒருபெரும்சுமையைநம்மீது சுமத்தியிருக்கிறது.

மக்களின் வாக் குரிமையே பறிபோகும் அளவுக்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை உருவாக்கியவர்கள் யார் என்பதுஉங்களுக்குநன்றாகத் தெரியும். ஒன்றியத்தில் ஆட்சி செய்து கொண்டிருக்கும் ஆட்சியாளர்கள் இதை உருவாக்கியிருக் கிறார்கள். எவ்வாறு, விசாரணை அமைப்புகளை வைத்து, பல்வேறு மாநிலங்களில் இருக்கும் ஆட்சிகளுக்கு இன்னல்களையும், துன்பங்களையும் தந்து கொண்டிருக் கிறார்களோ, அதேபோல் தேர்தல் ஆணையத்தையும் பயன்படுத்தி அப்படி ஒரு சூழ்நிலையை அவர்கள் ஏற்படுத்தியிருக் கிறார்கள்.

ஏற்கெனவே, நீங்கள் தொலைக்காட்சிகளில், பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள், படித்திருப்பீர்கள். நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வெளிப்படையாகவே வாக்குத் திருட்டைப் பற்றி பல்வேறுகுற்றச்சாட்டுகளை எடுத்து வைப்பது மட்டுமல்லாமல், ஆதாரங்களோடு அதைச் சுட்டிக்காட்டி வெளிப் படுத்திக்கொண்டிருக்கிறார். நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ள விரும் புவது தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் உண்மையான வாக்காளர் ஒருவர்கூட வாக்காளர் பட்டியலிலிருந்து விடுபட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான்திராவிட முன்னேற்றக் கழகம் நீதிமன்றத்துக்கு சென்றிருக்கிறோம்.

மக்கள் மன்றத்திலும் விளக்கிக் கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், கடந்த அக்டோபர் 27ம் தேதி நம்முடைய தோழமைக் கட்சிகளாக இருக்கக்கூடிய கூட்டணிக் கட்சித் தலைவர்களை யெல்லாம் அழைத்து இது சம்மந்தமாக கூட்டத்தை நடத்தி பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டு, அதைத் தொடர்ந்துநவம்பர் 2ம்தேதி தமிழ்நாட்டில் இருக் கும் அனைத்துக்கட்சிக் கூட்டம் கட்சிப் பாகுபாடின்றி பதிவு செய்யப்பட்டிருக்கும் எந்தக் கட்சியாகஇருந்தாலும் அது நமக்கு எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, நம்மை விமர்சிக்கும் கட்சியாக இருந்தாலும் சரி, எந்த கட்சிகளாக இருந்தாலும் பாகுபாடு பார்க்காமல் அத்தனை கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தோம்.

அந்த கூட்டத்தையும் கூட்டினோம். அதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற் றியிருக்கிறோம். அந்த அடிப்படையில் நாம் நீதிமன்றத்துக்குச் சென்றிருக்கிறோம். அதுமட்டுமின்றி, கடந்த 11ம் தேதிதமிழ்நாட்டில்இருக்கும் மாவட்டத்தலைநகரங்களில் நம்முடைய தோழமைக் கட்சிகளின் தலைவர் களெல்லாம் பங்கேற்கக் கூடிய வகையில் ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தி முடித்திருக்கிறோம்.

நம்முடைய உணர்வுகளையெல்லாம் தொடர்ந்து வெளிப்படுத்தி யிருக்கிறோம். வழக்கமாகத் தேர்தலில் கழகத்தை வெற்றிபெற வைக்கும் பொறுப்பைத்தான் உங்களிடத்தில் ஒப்படைப்பதுண்டு. ஆனால் இந்த முறை, மக்களுடைய வாக் குரிமையைப் பெற்றுத் தரும் பெரும் பொறுப்பை யும் கூடுதலாக உங்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். அதுவும் கொளத்தூர் தொகுதியின் செயல் வீரர்களாக விளங்கிக் கொண்டிருக்கும் உங்களி டம் சொல்ல வேண்டிய அவசிய மில்லை.

என்னைவிடவிழிப்பாக இருக்கக்கூடியவர்கள் நீங்கள். வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள் என்ற நம்பிக்கைநிறையஇருக்கிறது. நமக்குஅதிககாலஅவகாசம் இல்லை. அதை முதலில் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நவம்பர் 4ஆம் தேதி முதல் டிசம்பர் 4ஆம் தேதி வரையில் ஒருமாத காலம் நிர்ணயம் செய்யப்பட்டு, ஒரு மாதத்திற்குள் எல்லோருடைய கணக்கீட்டுப் படிவமும், அதாவதுநாம்வாக்காளராக சேரும்விண்ணப்பப்படிவம் அதைத்தான் கணக்கீட்டுப் படிவம்என்றுசொல்கிறோம். கணக்கீட்டுப் படிவம் என்றாலும் சில பேருக்குப் புரியாது.

நாம் வாக்காளராக சேருவதற்கு ஒரு படிவம் கொடுக்கிறார்கள். இன்றைக்கு தேதி 14. பத்து நாட்கள் முடிவடைந்து விட்டன. மீதி இருப்பது எத்தனை நாட்கள் என்று உங்களுக்குத் தெரியும். அந்த விண்ணப்பதை நாம் வாங்கிப் பார்க்கும் போது, நமக்குப் பெரிய குழப்பம் வருகிறது. தலை சுற்றுகிறது. தமிழ்நாடு அதுகுறித்து புலம்பிக்கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, மேற்கு வங்கத்தில்முதலமைச்சராக இருக்கும் மம்தா பானர்ஜி மிகப் பெரிய போராட்டங்களை நடத்தித் தங்களுடைய எதிர்ப்பை வெளிப் படுத்தியி ருக்கிறார்கள்.

அதேபோல்,கேரளாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஆளுங் கட்சி மட்டுமல்லாமல் அங்கு இருக்கும் எதிர்க் கட்சியும் ஒன்றுசேர்ந்து போராட்டம் நடத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டு அவர்களும் எதிர்ப்பை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் எதிர்க்கட்சி என்று ஒன்று இருக்கிறது. அது எதிர்க்கட்சியாக இல்லை. இப்படியே சென்றுக்கொண்டி ருந்தால் எதிர்க்கட்சியாகமட்டுமல்ல. உதிரிக்கட்சியாககூட இருக்க முடியாத ஒரு சூழ்நிலை நிச்சயம் ஏற்படும்.

அதாவது தங்களுடைய கட்சியை டெல்லியில் கொண்டு சென்று அடமானம் வைத்துவிட்டு அந்தஎஸ்ஐஆரை ஆதரித்து அவர்கள் போட்டுக்கொண் டிருக்கும் நிபந்தனைகளை எல்லாம் ஏற்றுக்கொண்ட நிலையில் அவர்கள் அடமானம் வைத்திருக் கிறார்கள்.அதை ஆதரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு எதிர்ப்பு தெரிவித்து எல்லா கட்சிகளும் உச்ச நீதிமன்றத்திக்குச் செல்கிறோம்.

ஆனால், இங்கு எதிர்க்கட்சியாக இருக்கும் அதிமுக அதை ஆதரித்து உச்ச நீதிமன்றத்திற்கு செல்லும் வெட்கக் கேடு நாட்டில் நடந்து கொண்டி ருக்கிறது. மக்களை சந்திக்க அவர்களுக்கு தெம்பு இல்லை. அதனால்தான் இந்த குறுக்கு வழியை அவர்கள் நாடியிருக் கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட நிலையில் உங்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, தொகுதி முழுவதும்ஒருபூத்விடாமல் சுற்றிச் சுழல வேண்டும்.

அந்தக் கணக்கீட்டுப் படிவங்களை நிரப்ப நாமெல்லாம் மக்களுக்கு உதவியாகஇருக்கவேண்டும். தேர்தல் ஆணையம் நியமித்திருக்கும் பிஎல்ஓக்கும் மக்களுக்கும் இடையே நம்முடைய பிஎல்ஏ2தான் துணை நிற்க வேண்டும். உதவிசெய்ய வேண்டும். ஆலோசனைகளை வழங்க வேண்டும். அதைப் பூர்த்தி செய்ய அனைத்து வகையிலும் நீங்கள் துணைநிற்க வேண்டும் என்று உங்களையெல்லாம் இந்தநேரத்தில்நான்கேட்டுக் கொள்கிறேன்.

கொளத்தூரில் வெற்றி என்பது, நிர்ணயிக்கப்பட்ட வெற்றிதான். அதில் எந்த சந்தேகமும் இல்லை. இந்தப் பணியைப் பொறுத்தவரை, நான் வெற்றி பெறுவதில் எனக்குஇருக்கும்ஆர்வத்தை விட உங்களுக்குத்தான் அதிகமாக இருக்கிறது.

நான் எப்போதும் கொளத்தூருக்கு வரும்போதெல்லாம் சொல்வதுண்டு.என்னதான் நான்திமுகவின்தலைவராக இருந்தாலும், என்னதான் தமிழ்நாட்டின் முதலமைச் சராக இருந்தாலும், தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து மாவட்டங்களுக்கும், அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று சுற்றிச் சுழன்றுக் கொண்டிருந்தாலும், கொளத்தூருக்கு வரும் போதுதான்எனக்குப்பெரிய உத்வேகமும், உற்சாகமும் வழங்கும் வகையில் தொடர்ந்து நீங்கள் வரவேற்பைத் தந்து கொண்டிருக்கிறீர்கள்.

எனவே, 10 நாட்களுக்கு, 15 நாட்களுக்கு ஒருமுறை அல்லது இருமுறை நானும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறேன்.எனவே, இந்த வாக்காளர்களைச் சரிபார்க்கும் எஸ்ஐஆர் வாக்குசேகரிக்கும்பணியைப் பொறுத்தவரைக்கும், உங்களுக்கு எந்த உதவி வேண்டுமானாலும்,நாங்கள் செய்வதற்குக் காத்திருக்கிறோம்; தயாராக இருக்கிறோம். ஆனால், நம்முடைய பணியில் சுணக்கம் இருந்துவிடக்கூடாது.

நான் ஏற்கெனவே சொன்னதுபோன்று, இந்த மாதம் 4ம் தேதியிலிருந்து அடுத்தமாதம்4ம்தேதிவரை என்று சொன்னாலும்,பத்து நாட்கள் முடிந்துவிட்டது. எனவே, மீதமிருப்பது இன்னும் 15 நாட்கள்தான். எனவே, அதனை முடிக்க வேண்டிய பணிகளில் நீங்கள் ஈடுபடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது.

அந்தப் பணியை வெற்றிகரமாக முடித்துத் தாருங்கள் என்று உங்களை அன்போடுகேட்டு,எவ்வாறு கொளத்தூர் தொகுதி, மற்ற தொகுதிகளுக்கெல்லாம் எடுத்துக்காட்டாகவிளங்கிக் கொண்டிருக்கிறதோ, அதேபோல் இந்த எஸ்ஐஆர் பிரச்சினையில் முறையாக வாக்கு சேகரிக்கின்ற பணிகளிலும்முதலிடத்தைப் பெறும் வகையில் நீங்கள் இருப்பீர்கள்என்றநம்பிக்கை எனக்கு நிரம்ப இருக்கிறது". இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் உள்ள 7000 பள்ளிவாசல்களின் ஜமாத் ஒருங்கிணைப்பு மாநில மாநாடு!!



திருப்பூர் நவம்பர் 15

வாக்காளர் திருத்த பணியில் குடியுரிமை தொடர்பாக சில கேள்விகள் கேட்கப்பட்டு இருப்பது தான் குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது! டெல்லி கார் வெடிப்பு சம்பவத்தில் தொடர்புடையவர்களை உடனடியாக கைது செய்து கடுமையான தண்டனையை வழங்க வேண்டும். திருப்பூரில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலாளர். அபூபக்கர் பேட்டி.

திருப்பூரில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் மாநில பொதுச் செயலாளர்.

அபூபக்கர் செய்தியாளர்களிடம் பேசுகையில் தமிழகத்தில் உள்ள 7000 பள்ளிவாசல்களின் ஜமாத் ஒருங்கிணைப்பு மாநில மாநாடு வருகிற ஜனவரி மாதம் 28ஆம் தேதி தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் தேசிய தலைவர். காதர் மைதீன் தலைமையில் நடைபெறுகிறது. என்றும் இந்த மாநாட்டில் தமிழகத்தின் முதல்வர் மு. க. ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகிறார் என்றும் மேலும் இந்த மாநாட்டில் தமிழ்நாட்டில் உள்ள 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களின் ஜமாத் நிர்வாகிகள் பங்கேற்பார்கள் மேலும் இந்தியாவில் முஸ்லிம் மக்கள் சந்திக்கும் பிரச்சினைகள் வருகிற சட்டமன்ற தேர்தலில் எவ்வாறு பணியாற்றுவது குறித்த முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்படும் என்றும் எதிர் வருகின்ற 19ஆம் தேதி இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாநில செயற்குழு கூட்டம் நடைபெறுவதாகவும் இந்த கூட்டத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப்பணி குறித்து தகவல்களை பரிமாற உள்ளதாகவும் வாக்காளர் திருத்த பணி முறையாக நடக்கிறதா என்றும் நிர்வாகிகள் இடம் கருத்து கேட்டு அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து அறிவிக்க உள்ளதாகவும் குறைந்த காலத்தில் வாக்காளர் தீவிர திருத்தணி தொடங்கப்பட்டுள்ளது என்றும் வாக்காளர் திருத்த பணியில் குடியுரிமை தொடர்பான சில கேள்விகள் கேட்கப்பட்டு இருப்பது தான் குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது என்றும் அலுவலர்கள் பற்றாக்குறை குறைந்த கால அவகாசத்துக்குள் இந்த பணியை எப்படி செய்ய முடியும் என்பதை கேள்வி வடிவத்தின் பெற்றோரின் ஆவணங்களை தகவல்களை அனைவராலும் எப்படி சமர்ப்பிக்க முடியும் என்றும் பல்வேறு குளறுபடிகள் நிலவுவதாகவும் குடியுரிமை குறித்த கேள்வி கேட்கக்கூடாது இந்திய தேர்தல் ஆணையத்தில் எந்தவித குறிப்பிடும் இருக்கக் கூடாது என்றும் அதேபோல டெல்லி கார் வெடிப்பு சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்றும் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இளைஞரணி மாநில தலைவர். முகமது யூனுஸ் திருப்பூர் மாவட்ட செயலாளர் இப்ராஹிம் திருப்பூர் வடக்கு மாவட்ட தலைவர் சையது முஸ்தபா உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# மேகதாது வழக்கில் திமுக அரசு வலுவான வாதங்களை எடுத்து வைக்கவில்லை ஓ.பன்னீர்செல்வம்",



சென்னை, நவ.15–

மேகதாது வழக்கு தொடர்பாக முன்னாள் முதல் அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்து இருப்பதாவது; " காவேரியில் தமிழ்நாட்டிற்குள்ள உரிமையை பறித்திடும் வகையில் கர்நாடக அரசு தயாரித்துள்ள மேகதாது அணை குறித்த விரிவான திட்ட அறிக்கையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த வழக்கினை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மறுத்துள்ளது தி.மு.க. அரசின் அலட்சியப் போக்கினை, அக்கறையின் மையை,கையாலாகாத்தனத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. தமிழ்நாட்டிற்கு ஒவ்வொரு ஆண்டும் மாதாந்திர அடிப்படையில் 177.25 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்பது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு. ஆனால், மழைப் பொழிவு குறைவு என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி இந்தத் தீர்ப்பினை கர்நாடக அரசு செயல்படுத்தாத நேர்வுகள் தான் அதிகம் என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டிற்கு உரிய நீரை தராமல் உபரி நீரை மட்டுமே திறந்துவிடுவதை கர்நாடக அரசு வழக்கமாகக் கொண்டுள்ளது. இதற்காக, காவேரி மேலாண்மை வாரியத்திடமும், காவேரி ஒழுங்கு முறை குழு முன்பும் தமிழ்நாடு ஒவ்வொரு ஆண்டும் போராடி வருகிறது. உண்மை நிலை இவ்வாறிருக்க, மேகதாது அணை குறித்த விரிவான திட்ட அறிக்கை தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு வந்த போது, வலுவான வாதங்களை தமிழ்நாடு அரசு சார்பில் ஆணித்தரமாக வைத்திருக்க வேண்டும். ஏற்கெனவே தமிழ்நாட்டிற்கு உரிய நீரை கர்நாடகம் திறந்துவிடாத நிலையில், மேகதாது அணை கட்டப்பட்டால் கூடுதலாக 67 டி.எம்.சி. நீரை கர்நாடகம் தேக்கி வைத்துக் கொள்ள முடியும் என்பதையும், இதன் மூலம் பில்லிகுண்டுவுக்கு வரும் காவேரி நீரின் ஆதாரமாக விளங்கும் கபினி மற்றும் கிருஷ்ணராஜ சாகர் அணைகளுக்கு வரும் நீர் வரத்து குறையும் என்பதையும், மேகதாது அணைத் திட்டம் தமிழ்நாட்டை பாலைவன மாக்கும் செயல் என்பதையும், இது காவேரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின் நோக்கத்தை சீர்குலைக்கும் செயல் என்பதையும் மூத்த வழக்கறிஞர்கள் மூலம் எடுத்துரைத்திருந்தால், உச்ச நீதிமன்றம் தமிழ்நாட்டின் கோரிக்கையை நிச்சயமாக விசாரணைக்கு எடுத்துக் கொண்டிருக்கும். காவேரி நதிநீர்ப் பங்கீடு விவகாரத்தில் கர்நாடக அரசின் தமிழ்நாட்டிற்கு எதிரான முந்தைய நிலைப்பாடுகளை உச்ச நீதிமன்றத்தில் தி.மு.க. அரசு பட்டியலிட்டி ருக்குமேயானால், விரிவான திட்ட அறிக்கையை பரிசீலனை செய்ய உச்ச நீதிமன்றம் நிச்சயம் உத்தரவிட்டு இருக்காது. தி.மு.க. அரசின் திறமையின்மை காரணமாக, வலுவான வாதங்களை முன்வைக்காததன் காரணமாக மேகதாது அணை குறித்த விரிவான திட்ட அறிக்கையை காவேரி மேலாண்மை வாரியம் மற்றும் காவேரி ஒழுங்கு முறை குழு ஆகியவற்றை சேர்ந்த வல்லுநர்கள் பரிசீலிக்கும் சூழ்நிலை தற்போது உருவாகி யுள்ளது. இது தமிழ்நாட்டிற்கு இழைக்கப்பட்ட மிகப் பெரிய அநீதி. முதலமைச்சர் இதில் தனிக் கவனம் செலுத்தி, மேகதாது அணை குறித்த விரிவான திட்ட அறிக்கை பரிசீலனை செய்யப்படும் என்ற உச்ச நீதிமன்ற உத்தரவினை எதிர்த்து மேல்முறையீட்டு மனு அல்லது மறுசீராய்வு மனுவை தாக்கல் செய்து, காவேரி நதிநீர்ப் பங்கீட்டில் தமிழ் நாட்டின் உரிமையை நிலை நாட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. ",

# முன்னாள் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேருவை குழந்தைகள் மாமா என்று அழைத்தனர்

## குழந்தைகள் தின விழாவில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எல்.எல்.ஏ. பேச்சு

விழுப்புரம், நவ. 15–

கல்வித்துறையில் பல்வேறுதிட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழக முதலமைச்சரை பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் அப்பா அப்பா என பெரு மகிழ்ச்சியுடன் அழைப்பதாக செஞ்சியில் நடைபெற்ற குழந்தைகள் தின விழாவில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏகலந்து கொண்டு குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் கல்வி உபகரண பொருட்களை வழங்கி பெருமிதம் தெரிவித்தார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி காந்தி பஜாரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாள் விழா முன்னிட்டு பள்ளியில் குழந்தைகள் தின விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எல்.எல்.ஏ.கலந்து கொண்டு குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் கல்வி உபகரண பொருட்களை வழங்கி குழந்தைகளுக்கு வாழ்த்து தெரிவித்து சிறப்புறையாற்றினார்.

அப்போது முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.பேசுகையில்:

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளில் குழந்தைகள் தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது முன்னாள் பிரதமர் நேருவை மாமா என்று அழைத்தனர். அந்த வகையில் இன்று தமிழகத்தில்கல்வியின் மூலம் தான் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் உயர்த்த முடியும் என்ற தொலைநோக்கு சிந்தனையுடன் கல்விக்கு தனி கவனம் செலுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் கல்வித்துறைக்கு பல்வேறு சிறப்பு திட்டங்கள் செயல் படுத்தி வருகிறார். உயர்கல்வியில் படிப்பதற்காகவும் வெளிநாட்டில் சென்று படிப்பதற்காவழிவகை செய்கின்ற திட்டங்களாகவும், வெளிநாடுகளுக்கு சென்று படிக்கும் மாணவர்களுக்கு 36 லட்சம் ரூபாய் வழங்கி உள்ள தமிழ்நாடு முதலமைச்சரை பார்த்தவுடன் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் முதலமைச்சரை அப்பா அப்பா என்று பெரு மகிழ்ச்சியுடன் அழைப்பதாக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பெருமைப்பட தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், நகர செயலாளர் கார்த்திக், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் பொன்னம்பலம்,சுமித்ரா சங்கர், தலைமை ஆசிரியர் ஆயிஷா பேகம், நிர்வாகிகள் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ரசூல் பாஷா, தொண்டரணி பாஷா, கோகுல், அறிவழகன் உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.

# எம்.எல்.ஏ அருளை குண்டர் சட்டத்தில் கைது செய்யாவிட்டால் பெரிய போராட்டம் நடத்துவோம்.

## பாமக வழகறிஞர் பாலு பரபரப்பு புகார்.

சேலம், நவ. 15–



சேலம் மேற்கு தொகுதி பாமக எம்எல்ஏ அருள் ராமதாஸ் ஆதரவாளர். இந்நிலையில் 4ஆம் தேதி வாழப்பாடி அருகே பாமக நிர்வாகியின் தந்தை இறுதிச் சடங்குக்கு சென்றபோது வாகன நிறுத்தத்தில் பிரச்சனை ஏற்பட்டது.

இதனையடுத்து அன்புமணி ஆதரவாளர்களுக்கும் அருள் ஆதரவாளர்களுக்கும் மோதல் உண்டானது. பின்னர் இரு தரப்புக்கும் எதிராக 4 வழக்குகள் பதிவாகின. இதனால் அன்புமணி தரப்பு 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஆனால் அருள் மீது நடவடிக்கை இல்லை எனக் கூறி சென்னை டிஜிபி அலுவலகத்தில் மனு அளித்தனர். இதனையடுத்து பாமக வழக்கறிஞர் பாலு செய்தியாளர்களிடம் பேசினார். அருள் மீது 4 புகார்கள் கொடுத்தும் நடவடிக்கை இல்லை எனவும், ஆளும் கட்சி தொடர்பால் ஜிகே மணி, அருள் சட்ட ஒழுங்கை பாதிக்கின்றனர் எனக் குற்றம்சாட்டினார். இந்நிலையில் அருளை குண்டர் சட்டத்தில் கைது செய்ய வேண்டும். கைதான எங்கள் தரப்பினரை குண்டரில் போட 10 லட்சம் கொடுத்ததாக தகவல் எனவும் தெரிவித்தார்.

பின்னர் போலீசார் பாரபட்சம் காட்டினால் பெரிய போராட்டம் நடத்துவோம் என எச்சரித்தார். பாமகவில் 99% உறுப்பினர்கள் அன்புமணி பக்கம் உள்ளனர் எனவும், அருள் போலீசைப் பயன்படுத்தி பிரச்சனை உருவாக்குகிறார் எனக் கூறினார். இதனையடுத்து சிறப்பு புலனாய்வு அதிகாரிகள் நியமிக்க வேண்டும் அல்லது நீதிமன்றம் செல்வோம் எனத் தெரிவித்தார்.



ஈரோடு வேப்பம்பாளையம், முத்து முஹாலில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் சார்பில் நடைபெற்ற வாங்குவோர்– விற்போர் சந்திப்பு நிகழ்வில் அமைக்கப்பட்டிருந்த நிறுவனங்களின் கருத்துக்காட்சி அரங்குகளை தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குனர் நிர்மல்ராஜ், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஆகியோர் பார்வையிட்டார்கள்.

## உங்களுடன் ஸ்டாலின் முகாமில் அமைச்சர்.



சேலம்மாநகராட்சி 59,60வது வட்டங்களில் நடைபெறும் உங்களுடன்_ ஸ்டாலின் முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன்.பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மனுக்கள் மீதான துரித நடவடிக்கைகள் பற்றி கேட்டறிந்தார்,மேலும் பல்வேறு துறைகளின் கீழ் இணைய சேவைகளை பெற பதிவு செய்த பயனர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.இந்நிகழ்வில் சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன்,மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன் ஆகியோர்,துறை சார்ந்த அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர்.

## சேலத்தில் இன்று மின் தடை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு தடையில்லா மின்சாரம் வழங்கும் பொருட்டு மின்நிலையங்கள் மற்றும் துணை மின் நிலையங்களில் மாதாந்திர முறையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுவது வழக்கம்.

அத்தகைய சமயங்களில் மின் பாதைகளில் பழுது நீக்குதல்,மின் கம்பிகளை மாற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த பராமரிப்பு பணிகளின் போது சம்பந்தப்பட்ட மின் பாதைகளை சேர்ந்த பகுதிகளில் மின்தடை செய்யப்படும். இதுதொடர்பாக அப்பகுதி மக்களுக்கு முன்னறிவிப்பு மூலம் தகவல் தரப்படுவது வழக்கம்.அதன்படி சேலம் மாவட்டத்தில் இன்று(15.11.2025) சனிக்கிழமை பல்வேறு பகுதிகளில் மின் தடை அறிவிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் தும்பிப்பாடி, தின்னப்பட்டி, புக்கம்பட்டி துணை மின் நிலையத்தில் நாளை மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுகிறது. இதனையொட்டி இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை கீழ்காணும் இடங்களில் மின் நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தும்பிப்பாடி: சிக்கனம்பட்டி, ஆர்.சி.செட்டிப் பட்டி ஒரு பகுதி, கோட்டமேட்டுப்பட்டி, ஓமலூர் நகர், பெரமச்சூர், பனங்காடு, காரிவளவன்காடு, வ.உ.சி.நகர், காமலாபுரம்.

தின்னப்பட்டி: தும்பிப்பாடி, தின்னப்பட்டி, மாட்டுக்காரன்புதூர், சின்னேரிகாடு, பாலமேடு, வத்தியூர், டேனிஷ்பேட்டை, காஞ் சேரி, உள்கோம்பை, வடகம்பட்டி, காந்திநகர், வாழையன்தோப்பு, முள்ளிச்செட்டிபட்டி, சரக்கப்பிள்ளையூர், ஒட்டத்தெரு, ரெட்டியூர், வேடப்பன்காடு, பொட்டியபுரம், சின்னவெள்ளையனூர், சட்டூர்.

புக்கம்பட்டி: குப்பூர், தாராபுரம், குண்டூர், செம்மாண்டப்பட்டி, சிந்தாமணியூர், மயிலம்பட்டி, கருப்பணம்பட்டி, பச்சனம்பட்டி, பஞ்சுகாளிபட்டி, பெரியப்பட்டி, செம்மனூர், சாத்தப்பாடி, வாலதாசம்பட்டி, காமனேரி, மாணத்தாள், நல்லா கவுண்டம்பட்டி, திண்டமங்கலம் ஆகிய பகுதிகளில் மின் வினியோகம் இருக்காது எனத் மின் வாரியம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் திண்டுக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணி தொடர்பான மனித சங்கிலி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

## புத்தாநத்தத்தில் வாக்காளர் சிறப்பு திருத்தப்பணியை உடனடியாக நிறுத்திடவும் வாக்காளர் சிறப்பு திருத்தப்பணிக்கு கால அவசம் கொடுத்திடவும் வலியுறுத்தியும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்





மணப்பாறை நவ 14

மணப்பாறை தாலுகா புத்தாநத்தம் கடைவிதி உள்ள ரசீதலி திடலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வாக்காளர் சிறப்பு திருத்தப்பணியை உடனடியாக நிறுத்திடவும் ,வாக்காளர் சிறப்பு திருத்தப்பணிக்கு கால அவசம் கொடுத்திடவும் வலியுறுத்தியும் ஆர்ப் பாட்டம் நடைபெற்றது .

இவ் ஆர்ப்பாட்டத் திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி புறநகர் மாவட்ட குழு உறுப்பினர் சிராஜுதீன் தலைமை வகித்தார் மன்சூர்ராஜா அப்துல் காதர் ஹக்கீம் சேட் ஜான்பா அக்பர் அலி அஜ்மீர் உதுமான் மைதீன் சபி மைதீன் சித்திக் அனஸ் சூபி. இஸ் மாயில் பவுன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் .

தமிழ்நாடு விவசாய சங்க மாநில துணை செயலாளர் இந்திரஜித் புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார் துணைச் செயலாளர் பழனிச்சாமி பொருளாளர் ஜனசக்தி உசேன் மணவை தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் மருங்காபுரி ஒன்றிய செயலாளர் ஆறுமுகம் துணைச் செயலாளர் கோவிந்தராஜ் நகர செயலாளர் தங்கராஜ் துணைச் செயலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் உரை நிகழ்தினார்கள் .

கருப்பூர் ஊராட்சி கடப்பிச்சம்பட்டி புத்தாநத்தம் ஊராட்சி கல்கட்டியூர் பகுதியில் இருந்து தனம் போதும்பொண்ணு செந்தில் சரவணன் சுப்பையா வீரமலை கார்த்தி மோகன் ஆகியோர் தமிழ்நாடு விவசாய சங்க மாநில துணை செயலாளர் இந்திரஜித் முன்னிலையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைத்து கொண்டனர் .

முன்னதா வாக்காளர் சிறப்பு திருத்தப்பணியை உடனடியாக நிறுத்திடவும் வாக்காளர் சிறப்பு திருத்தப்பணிக்கு கால அவசம் கொடுத்திடவும் வலியுறுத்தியும் முழக்கம் மீட்டனர்.

## திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் பராசக்தி அம்மன் தேர் வெள்ளோட்டம் தொடங்கியது!

திருவண்ணாமலை: நவ.15–

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் பராசக்தி அம்மன் தேர் வெள்ளோட்டம் தொடங்கியது. ரூ.72 லட்சம் மதிப்பீட்டில் 48 உயரத்தில் புனரமைக்கப்பட்ட இத்தேரை, பக்தர்கள் வடம் பிடித்து இழுத்து வருகின்றனர்.

## சமூக சேவகர் கோரிக்கை!

சேலம்: நல 14



சேலம் மாவட்டம் : பச்சப்பட்டி கரை மேட்டு முனியப்பன் கோயில் வீதியின் நடுவே உள்ள மின் கம்பம் கீழே விழும் நிலையில் உள்ளது என சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் பலமுறை தகவல் தெரிவித்தும் மனுக்கள் அளித்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அந்தப் பகுதியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதாகவும் தினமும் வாகனங்கள் செல்வதற்கு முக்கிய சாலையாக அமைந்துள்ளது மேலும் அந்தப் பகுதியில் சாலையின் நடுவே அந்த கம்பம் உள்ளதால் வாகனங்கள் செல்வதற்கு மிகவும் இடையூறாக உள்ளதாகவும் மின்கம்பம் முறிந்து விழுந்தால் பல உயிர் சேதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது எனவே உரிய துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக சேவகர் டாக்டர் வி கே பிரகாஷ் கோரிக்கை வைத்துள்ளார்.

## மாமல்லபுரம் அருகே கீழே விழுந்து நொறுங்கிய பயிற்சி விமானம்",

“செங்கல்பட்டு, நவ.15–



செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் அருகே திருப்போரூர் பகுதியில் சிறிய ரக பயிற்சி விமானம் ஒன்று சென்றுகொண்டிருந்தது. அப்போது விமானத்தில் திடீரென தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து, விமானத்தில் பயணித்த 3 பேர், பாராசூட் மூலம் முன்னதாகவே விமானத்தில் இருந்து கீழே குதித்து உயிர் தப்பினர். கோளாறு ஏற்பட்ட விமானம், கட்டுமானப் பணி நடைபெற்ற இடம் ஒன்றுக்கு அருகே சகதியில் விழுந்து நொறுங்கியது. ஆட்கள் யாரும் இல்லாத இடத்தில் விமானம் விழுந்ததால், அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயமோ, உயிரிழப்போ ஏற்படவில்லை. விமான விபத்து குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். விமானம் எங்கிருந்து வந்தது? எங்கே சென்றுகொண்டிருந்தது? கோளாறு காரணமாக விமானம் கீழே விழுந்ததா? அல்லது வேறு ஏதேனும் காரணமா என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மாமல்லபுரம் அருகே பயிற்சி விமானம் கீழே விழுந்து விபத்துக்குள்ளான சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது. புதுக்கோட்டை அருகே நேற்று தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சிறிய ரக பயிற்சி விமானம் ஒன்று சாலையில் தரையிறங்கியது குறிப்பிடத்தக்கது.

# செஞ்சி பேரூராட்சியில் ரூ 17.70 லட்சம் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பூமிபூஜை செய்து பணியை தொடக்கிவைத்தார்..



விழுப்புரம், நவ. 15–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சியில் உள்ள வ.உ.சி தெருவில் பொது நிதி திட்டத்தின் கீழ் 17.70 லட்சம்ரூபாய் மதிப்பீட்டில் புதிய வடிகால்வாய் காலுடன், சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு பூமி பூஜை விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் தலைமை தாங்கினார்.நகர செயலாளர் கார்த்திக் அனைவரையும் வரவேற்றார்.நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்து கொண்டு புதிய வடிகால்வாய் காலுடன் சிமெண்ட் சாலை அமைப்பதற்கு பூமி பூஜை செய்து பணியை தொடங்கி வைத்தார்.

இதில் முன்னாள் கவுன்சிலர் லதா கார்த்தி,நிர்வாகிகள் முருகன், கோபி, கார்த்திக், பழனி, ஜோசப், ஜான், கிஷோர்,ரிஸ்வான், அருள், மகளிர் அணி ஸ்டெல்லா, பிரேமா தொண்டரணி பாஷா,பணி ஆய்வாளர் கௌதமன்உள்ளிட்ட நிர்வாகிகள்கலந்து கொண்டனர்.

# விலையில்லா மிதிவண்டி வழங்கல்



சங்கராபுரம் நவ 15

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 450 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாந்த், மற்றும் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா. உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன், ஆகியோர் விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார்கள். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கார்த்திகா, அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டருக்கு விண்ணப்பித்த மாற்றுத்திறனாளிகளுக்கு நேர்காணல்

## *பெரம்பலூர் கலெக்டர் நேரில் ஆய்வு

பெரம்பலூர் : நவ.15–

பெரம்பலூரில் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் சிறப்பு சக்கர நாற்காலி வேண்டி விண்ணப்பித்த மாற்று திறனாளிகளுக்கு நடைபெற்ற நேர்காணலை மாவட்ட கலெக்டர் மிருணாளினி பார்வையிட்டார்.

பெரம்பலூர் மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில், மாற்றுதிறனாளிகள் நலத் துறையின்சார்பில், இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் மின்கலத்தால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி வேண்டி விண்ணப்பித்த மாற்றுதிறனாளிகளுக்கு நடத்தப்பட்ட நேர்காணலை மாவட்ட கலெக்டர் மிருணாளினி பார்வையிட்டார்.



பெரம்பலூர் மாவட்டத்தில் மாற்று திறனாளிகளிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கு தீர்வு காணப்பட்டு வருகிறது. அந்த வகையில், பல்வேறு முகாம்களில் சக்கர நாற்காலி, மின்கல நாற்காலி வேண்டி விண்ணப்பித்த, மாற்று திறனாளிகளால் வழங்கப்பட்ட கோரிக்கை மனுக்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் நேற்று நேர்காணல் நடைபெற்றது. இந்த நேர்காணலில் 70க்கும் மேற்பட்ட மாற்று திறனாளிகள் கலந்து கொண்டனர்.

இந்த நேர்காணலில், தண்டு வடம் மற்றும் தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட மாற்று திறனாளிகள் இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் சக்கர நாற்காலி ஆகியவைகளை கேட்டு விண்ணப்பித்த மாற்று திறனாளிகளின் பாதிப்புகளை கண்டறிய, அரசு எலும்பு முறிவு மருத்துவர் மற்றும் பாதிப்புத் தன்மைகளை கண்டறிந்து பின்னர் வண்டியை இயக்க தகுதியுடையவர் என ஒப்புதல் தர பெரம்பலூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நேர்காணல் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து வண்டியை இயக்குவதற்குத் தகுதியுடைய அனைத்து மாற்று திறனாளிகளின் பெயர் பட்டியல்கள் அரசுக்கு அனுப்பி, நிதிஆதாரம் பெற்று, பதிவு மூப்பு அடிப்படையில் அவர்களுக்கான வண்டிகள் வழங்கப்படும்.இந்த நேர்காணல் நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்ட மாற்றுதிறனாளிகள் நலத்துறை அலுவலர் சீனிவாசன், பெரம்பலூர் வட்டாரப்போக்குவரத்து அலுவலர் சரவணபவ, அரசு எலும்பு முறிவு மருத்துவர் டாக்டர் தமிழ்செல்வன் உள்பட பல்வேறு அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இருக்கும் போது
ரத்ததானம்.... இறந்த
பின் கண்தானம்
செய்வீர்...

# சர்வதேச ஆங்கில மொழி சோதனை முறை தேர்வுக்கு இலவச பயிற்சி:

## தூத்துக்குடி கலெக்டர் தகவல்

தூத்துக்குடி, நவ.15–

“தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) நிறுவனமானது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சி திட்டங்களை வழங்கி வருகிறது. அதன் தொடர்ச்சியாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்கள் ஆஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, அயர்லாந்து, பிரான்ஸ், மற்றும் நியூசிலாந்து போன்ற முன்னணி வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் இளங்கலை அல்லது முதுகலை பட்டபடிப்பு பயில அடிப்படையான International English Language Testing System (IELTS) சர்வதேச ஆங்கில மொழி சோதனை முறை தேர்விற்கான பயிற்சி வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த பயிற்சியினை பெற 18 முதல் 35 வயது நிரம்பிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணாக்கர்கள் 12ம் வகுப்பு மற்றும் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.3 லட்சத்திற்குள் இருக்க வேண்டும். இந்த பயிற்சிக்கான கால அளவு ஒன்றரை மாதமும் விடுதியில் தங்கி படிக்க வசதியும், பயிற்சிக்கான செலவீன தொகையை தாட்கோவால் ஏற்கப்படும். இந்த பயிற்சியில் சேர்வதற்கு www.tahdco.com என்ற தாட்கோ இணையதளத்தில் பதிவு செய்யலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். “,

# பழைய ஓய்வூதியத் திட்டம்: தமிழக அரசின் நிலைப்பாட்டை தெரிவிக்க ஐகோர்ட்டு அறிவுறுத்தல்”,

மதுரை, நவ. 15–

“திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பிரெடெரிக் ஏங்கெல்ஸ், ஐகோர்ட்டு மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது: கடந்த 1.4.2003 அன்று முதல் தமிழ்நாடு அரசு பணியாளர்கள், ஆசிரியர்களுக்கு புதிய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்தி அரசாணை வெளியிடப்பட்டது. இந்த புதிய ஓய்வூதியத் திட்டத்துக்காக விதிமுறைகள் ஏதும் இல்லை. இதற்கிடையே மத்திய அரசு 2013ம் ஆண்டில் ஓய்வூதிய நிதி ஒழுங்குபடுத்துதல் ஆணையத்தை ஏற்படுத்தி பல்வேறு வழிகாட்டுதலைகளை தெரிவித்து உள்ளது. இந்த வழிகாட்டுதல்களையும் இப்போது வரை தமிழ்நாடு அரசு பின்பற்றவில்லை. இதுதொடர்பாக அமைக்கப்பட்ட வல்லுனர் குழு அறிக்கையை பின்பற்றி அரசாணைகளோ, விதிமுறைகளோ ஏற்படுத்தவில்லை. இதனால் ஓய்வூதிய பலன்களை பெறமுடியாமல் பலர் அவதிப்படுகின்றனர். எனவே புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார். இந்த மனு நீதிபதிகள் அனிதா சுமந்த், குமரப்பன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், மனுதாரரின் கோரிக்கை குறித்து அரசின் நிலைப்பாட்டை மனுதாரரிடம் தெரிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினர். இந்த வழக்கின் விசாரணையை வருகிற 19ந்தேதிக்கு ஒத்தி வைத்தனர்.”,

# தூத்துக்குடியில் ஏ.டி.எம். எந்திரத்தை உடைத்து கொள்ளை முயற்சி

“தூத்துக்குடி புதிய துறைமுகம் அருகே வணிக வளாகத்தில் இந்தியா 1 ஏ.டி.எம். உள்ளது. நேற்று முன்தினம் இரவு மர்ம நபர் உள்ளே நுழைந்து ஏ.டி.எம். எந்திரத்தை உடைத்து கொள்ளையடிக்க முயன்றுள்ளார். ஆனால் உடைக்க முடியாததால் ஆத்திரத்தில மானிட்டரை உடைத்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார். இதுகுறித்து ஏ.டி.எம். மையத்தின் சர்வீஸ் பார்ட்னரான தூத்துக்குடி கங்கா பரமேஸ்வரி காலனியை சேர்ந்த நடராஜன் மகன் சுரேஷ்குமார் (வயது 40) என்பவர் தெர்மல்நகர் காவல் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் இன்ஸ்பெக்டர் ஷோபாஜென்சி, சப் இன்ஸ்பெக்டர் அய்யம்பெருமாள் மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். அங்குள்ள சி.சி.டி.வி. கேமராவில் பதிவான வாலிபர் குறித்து விசாரணை நடத்தியதில் அவர் காதர்மீரான் நகரை சேர்ந்த செல்வம் மகன் வேல்முருகன் என்பது தெரியவந்தது. தலைமறைவாக உள்ள அவரை போலீசார் தேடி வருகின்றனர். இந்த சம்பவம் தூத்துக்குடியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. “,

# ஈரோடு: வளர்ப்பு நாய் கடித்ததில் உடல்நலம் பாதித்து கல்லூரி மாணவர் உயிரிழப்பு”,

“ஈரோடு, நவ.15–

ஈரோடு அருகே வளர்ப்பு நாய் கடித்ததில் கல்லூரி மாணவர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. வெள்ளோடு அருகே உள்ள கனகபுரம் பகுதியைச் சேர்ந்த நாகராஜ் என்பவரின் மகன் ரமேஷ், தனியார் கல்லூரியில் முதலாமாண்டு படித்து வந்துள்ளார். இந்நிலையில் ரமேஷை கடந்த 10 நாட்களுக்கு முன் அவரது வளர்ப்பு நாய் கடித்துள்ளது. ஆனால் உரிய சிகிச்சை எடுக்காமல் இருந்த ரமேஷ், கடந்த 3 நாட்களுக்கு முன் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். ரமேஷை கடித்த அவரது வளர்ப்பு நாயை, சில நாட்களுக்கு முன்னர் தெரு நாய்கள் கடித்தது தெரியவந்துள்ளது. இது தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. “,

# புதுச்சேரி வில்லியனூர் சுல்தான்பேட்டையில் ரூ. 1.53 கோடியில் வளர்ச்சிப் பணிகள்

## எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா துவக்கி வைத்தார்



புதுச்சேரி, நவ. 15–

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்ற தொகுதி, சுல்தான் பேட்டை ராஜா நகரில் இருந்து முத்துப்பிள்ளைப் பாளையம் வரை செல்லும் பல்ல வாய்க்காலில் இருந்து அப்துல்கலாம் நகருக்கு கிளை வாய்க்கால் அமைக்கும் பணிக்கு ரூ. 37,53,631/ நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப்பணித்துறை நீர்ப்பாசனக் கோட்டம் மூலம் மேற்கொள்ளப்பட உள்ள பணி மற்றும் ரூ. 1.16 கோடியில் அப்துல்கலாம் நகர், ரஹமத் நகர், ஜாகீர் உசேன் நகர், 5 ஸ்டார் நகர், திப்பு சுல்தான் நகர் மற்றும் 3 ஸ்டார் நகர் பகுதிகளில் பொதுப் பணித்துறை சாலைகள் மற்றும் கட்டிடங்கள் வடக்கு பிரிவு மூலம் சாலை அமைக்கும் பணிக்கான துவக்க நிகழ்ச்சி நேற்று காலை அப்துல்கலாம் நகரில் நடைபெற்றது.

இதில், தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா அவர்கள் கலந்துகொண்டு, வடிகால் வாய்க்கால் மற்றும்சாலை அமைக்கும் பணியை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை நீர்ப்பாசனக் கோட்ட செயற்பொறியாளர் ராஜ்குமார், உதவிப் பொறியாளர் லூயிப் பிரகாசம், இளநிலைப் பொறியாளர் பிரத்தீவி, சாலைகள் மற்றும் கட்டிடங்கள் வடக்குபிரிவு செயற்பொறியாளர் வைத்தியநாதன், உதவிப் பொறியாளர் சீனுவாசராம், இளநிலைப் பொறியாளர் குலோத்துங்கன் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகிகள், ஜாமத்தார்கள், ஊர் பிரமுகர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிவகங்கை மாவட்டத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக 2025–26 ஆம் கல்வி ஆண்டிற்கான பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து சேலம் மாவட்டம் வேம்படிதாளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் அமைச்சர் இரா. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வகணபதி, மாநிலங்களவை உறுப்பினர் சிவலிங்கம் ஆகியோர் முன்னிலையில் மிதிவண்டிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மகேஸ்வரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர நல அலுவலர் சின்னுசாமி ஆகியோர் உள்ளனர்.

# திண்டுக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்கான கணக்கெடுப்பு படிவம் 04.11.2025 முதல் 04.12.2025 வரையில் வீடு வீடாக வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு மீளப்பெறுவது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், தகவல்.

திண்டுக்கல், நவ. 15

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக சிறப்பு தீவிர திருத்தம் 2026 நடைபெற்று வருகின்றது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளில் அமைந்துள்ள 2124 வாக்குச் சாவடி மையங்களில் உள்ள வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரடியாக சென்று கணக்கெடுப்பு படிவங்களை (Enumeration Form) கடந்த 04.11.2025 முதல் 93% வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது அப்படிவங்களை பூர்த்தி செய்து மீளப்பெறும் பணிகள் 04.12.2025 வரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இப்பணியில் சட்டமன்றதொகுதிகளின் வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் மேற்பார்வையாளர்கள், தேர்தல் பிரிவு பணியாளர்கள் அனைவரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும்,மாவட்டத்தில் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து வாக்காளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் (SVEEP) கலை நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு பேரணிகள் நடத்தப்பட்டு வருகின்றது. வாக்காளர்கள் கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்து வழங்குவதனை எளிமைபடுத்தும் வகையிலும் எதிர் வரும் 15.11.2025 (சனிக்கிழமை) மற்றும் 16.11.2025 (ஞாயிறுக்கிழமை) ஆகிய இரண்டு தினங்கள் (SIR) சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

மேற்படி முகாமில் அந்தந்த வாக்குச்சாவடிகளிலேயே வாக்காளர்கள் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கணக்கெடுப்பு படிவங்கள் பூர்த்தி செய்வதில் ஏற்படும் சந்தேகங்கள் மற்றும் ஐயப்பாடுகளை களைந்திடவும், அதனை நிவர்த்தி செய்வதற்கு சம்மந்தப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் பணி அலுவலர்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். எனவே, மேற்கண்ட (SIR) சிறப்பு முகாமினை வாக்காளர்கள் நன்கு பயன்படுத்தி தங்களுக்கு வழங்கப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களை பூர்த்தி செய்து வழங்கிடுமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

# குழந்தைகள் தினம் எடப்பாடி பழனிசாமி வாழ்த்து”,

“சென்னை, நவ.15–

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது: அன்பிற்குரிய தமிழகத்தின் செல்லக் குழந்தைகள் அனைவருக்கும் எனது இனிய குழந்தைகள் தின நல்வாழ்த்துகள்.அனைவருக்கும் மகிழ்ச்சியான குழந்தைப் பருவமும் , ஒளிமயமான எதிர்காலமும் ஒருங்கே அமைந்திட இறைவனை வேண்டுகிறேன். உங்கள் கனவுகள் பெரியதாக இருக்கட்டும்; அந்தக் கனவுகளை நிறைவேற்ற முயற்சி, சக்தி, துணிவு மூன்றும் துணை நிற்கட்டும், இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.”,

# ஈரோட்டில் மாணவிகளுக்கு விலை இல்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா...

## ரூபாய் 55. 92 லட்சம் மதிப்பீட்டில் 1168 மாணவிகளுக்கு அமைச்சர் ஆட்சியர் வழங்கினார்கள்...





ஈரோடு. நவ. 15

ஈரோட்டில் நடைபெற்ற விழாவில் பள்ளி மாணவிகளுக்கான தமிழக அரசின் விலை இல்லா மிதிவண்டிகளை அமைச்சர் மற்றும் ஆட்சியர் வழங்கினார்கள்.

ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா அரசு மாதிரி மேல்நிலை பள்ளியில் மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி தலைமை வகித்தார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் துறை அமைச்சர் சு. முத்துசாமி மாணவிகளுக்கு தமிழக அரசின் விலை இல்லா மிதிவண்டிகளை வழங்கினார்.

மொத்தம் ரூபாய் 55. 92 லட்சம் மதிப்பீட்டில், 11 68 மாணவிகளுக்கு இந்த விலையில்லா நிதி வண்டிகள் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு பள்ளி கல்வித்துறை சார்பில் 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டிற்கான 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவிகளுக்கு, இந்த விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியின் போது அமைச்சர் சு முத்துசாமி செய்தியாளர்களிடம் பேசியதாவது..

தமிழக அரசும், தமிழக முதல்வரும் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் மீது மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இலவச காலை மற்றும் மதியம் சிற்றுண்டிகள் தரமாகவும் செவ்வயாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோல் கல்லூரிகளில் படித்து வரும் மாணவ மாணவிகளுக்கு பல்வேறு திட்டத்தின் கீழ் பல உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதில் தமிழ் புதல்வன், திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு அவைகள் மாணவ மாணவிகளுக்கு மிகுந்த பயனுள்ளதாக இருந்து.

அதேபோல் மேலும் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. மாணவ மாணவிகள் விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முழுவதும் பல்வேறு விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு, அதில் மாணவ மாணவிகள் கலந்து கொண்டு விளையாடி தங்களின் திறமைகளை வளர்த்து. அதேபோல் ஈரோடு மாவட்டத்தை பொருத்தவரை மலை கிராம பகுதிகளில் உள்ள மாணவ மாணவிகளுக்கும் பல்வேறு சிறப்பு சலுகைகள் செய்யப்பட்டு. தொடர்ந்து சிவகிரி பகுதியில் ஒரு மினி விளையாட்டு அரங்கம் அமைக்க திட்டப்பணிகள்தொடங்கப்பட்டு அங்கு விளையாட்டு அரங்கம் அமைக்கும் பணி நடைபெற்று.

அதே போல் ஈரோடு சிக்கிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்திலும் சற்று பெரிய அளவிலான ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட்டு மாணவ மாணவிகளுக்கு பயன் தரும் வகையில் இன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் துணை முதல்வராக உள்ள தமிழக விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழக மாணவர்கள் விளையாட்டு துறையில் சிறந்து விளங்க வேண்டும் என்று உறுதி எடுத்து மாணவ மாணவிகளுக்கான விளையாட்டு துறையில் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகிறார்.

அதேபோல் ஈரோடு மாவட்டத்தை பொருத்தவரை இந்த கல்வியாண்டில் 6.097 மாணவர்களுக்கும்,7.495 மாணவிகளுக்கும் என மொத்தம் 13. 512 தமிழக அரசின் நிலையில்லா மிதிவண்டிகள். இதன் மொத்த மதிப்பு 6. 55 கோடியாகும்.

இவ்வாறு அமைச்சர் சு. முத்துசாமி செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே இ பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி சி சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியன், துணை மேயர் வி. செல்வராஜ், மாவட்ட பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர் கோ. முரளி, அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஆனந்தி உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# குழந்தைகள் தினத்தை முன்னிட்டு அரசு பள்ளி மாணவர்களுடன் காலை உணவு: அமைச்சர் சா.மு.நாசர் பங்கேற்பு



ஆவடி: நவ.15–

திருமுல்லைவாயலில் உள்ள அரசு பள்ளியில் இன்று குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, அப்பள்ளி மாணவர்களுடன் அமைச்சர் சா.மு.நாசர் அமர்ந்து, காலை உணவை சாப்பிட்டார். இதில் ஆவடி மாநகராட்சி மேயர், ஆணையர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

திருமுல்லைவாயல், சத்தியமூர்த்தி நகரில் உள்ள அரசு தொடக்கப்பள்ளியில் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு, நேற்று காலை அப்பள்ளி மாணவர்களுடன் அமைச்சர் சா.மு.நாசர் அமர்ந்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் துவங்கி வைத்த காலை உணவு திட்டத்தின்படி தயாரிக்கப்பட்ட காலை உணவை சாப்பிட்டார். அவருடன் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், ஆணையர் சரண்யா, மாநகர செயலாளர் சண்பிரகாஷ், மண்டல தலைவர் அமுதா பேபிசேகர், பகுதி செயலாளர்கள் பேபிசேகர், பொன் விஜயன், வழக்கறிஞர் வினோத் உள்பட பலர் கலந்து கொண்டு சாப்பிட்டனர்.

# கோவை கூடலூர் நகராட்சியில் அடிக்கல் நாட்டு விழா!!




கோவை நவ:15

கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் கூடலூர் நகராட்சியில் பொது நிதியிலிருந்து

ரூ 1கோடி 41.70 லட்சம் மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டு விழாவை கூடலூர் நகராட்சி தலைவர் அ.அறிவரசு கலந்துகொண்டு துவங்கி வைத்தார்.

இதில் கூடலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தார் சாலை அமைத்தல், மழைநீர் வடிநீர் கால்வாய் ,கான்கிரீட் தளம் அமைத்தல், தடுப்புச் சுவர் அமைத்தல், சிறு பாலம் அமைத்தல், கம்பி வேலி ஆகிய பல திட்டங்களை கூடலூர் நகராட்சி தலைவர் அறிவரசு துவக்கி வைத்து சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆணையாளர் பூவேந்திரன்,நகர மன்ற துணைத் தலைவர் ரதி ராஜேந்திரன்,நகராட்சி பொறியாளர் சோமசுந்தரம் ,26வது வார்டு கவுன்சிலர் கீர்த்தனா,26 வார்டு செயலாளர் உதயகுமார்,நகர துணை செயலாளர் துரை செந்தில்,கட்சி நிர்வாகிகள்,உறுப்பினர்கள்,நகர மன்ற உறுப்பினர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஸ்ரீ நாராயணகுரு கல்லூரியின் மாணவி திரிஷலாஸ்ரீ சிறப்பு கட்டுரை



கோவை நவ:15

நாம் குழந்தைகள் தினத்தை கொண்டாடும் இந்த சிறப்பான நாளில்,சமூகப் பணியாளர்கள் அனைவரும் குழந்தைகளின் மதிப்பையும் முக்கியத்துவத்தையும் உணர வேண்டிய நேரம் இது.ஒரு நாட்டின் எதிர்காலம் அதன் குழந்தைகளின் கைகளில் இருக்கிறது. அவர்களின் நலன்,கல்வி, பாதுகாப்பு மற்றும் முழுமையான வளர்ச்சி ஆகியவை சமூக முன்னேற்றத்தின் அடித்தளமாகும் சமூகப் பணியாளர்களாகிய நாமெல்லோரும் குழந்தைகளின் உரிமைகளை காக்கவும், அவர்களின் கனவுகளை நனவாக்க வழி செய்யவும், ஒவ்வொரு குழந்தையும் மரியாதையுடனும் மகிழ்ச்சியுடனும் வாழும் சமூகத்தை உருவாக்கவும் பாடுபட வேண்டும்.

குழந்தைகள் வளர்வதே நாட்டின் வளர்ச்சி என்பதனை நாம் மனதில் கொள்ளுவோம்

சமூகப் பணியாளர் என்பவர் தனது வாழ்வையும் உழைப்பையும் தனக்காக பயன்படுத்திக் கொள்ளாமல் இந்த சமூகம் முன்னேற்றம் அடைவதற்கும் விழிப்புணர்வு அடைவதற்கும் பொது நலத்திற்காக பயன்படுத்துவார்கள்,அதிலும் குறிப்பாக தனது சமூக செயற்பாட்டை குழந்தைகள் நலனுக்காக பயன்படுத்துவது என்பது அறிய மிகப்பெரிய செயலாகும். அதிலும், குறிப்பிடத்தக்கவைகளாக சிலவற்றை தேர்ந்தெடுத்து கட்டுரையாக சமர்ப்பிக்கின்றேன்

குழந்தைத் தொழிலாளர்களை அறவே ஒழிப்பதற்கு, எந்தக்குழந்தையும் தொழிலில் ஈடுபடாமல் கல்வி, விளையாட்டு மற்றும் ஆரோக்கியமான வளர்ச்சியுடன் தன்னம்பிக்கையுடன் முன்னேறுவதற்கு சமூகமாக இணைந்து செயல்படுவது நமது கடமை.

குழந்தைகள் மீதான பாலியல் துன்புறுத்தல்களை கண்டறிந்து குற்றச்செயலில் ஈடுபட்டவர்களை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை பெற்றுத் தருவதோடு நில்லாமல் எப்போதும் இம்மாதிரியான குற்றச் செயல்கள் நடைபெறா வண்ணம் விழிப்புணர்வு அடைவதற்கு "Bad touch Good touch" பற்றிய விபரங்களை பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மூலமாக கற்பித்தல் செய்வதற்கு பிரச்சாரம் செய்வது.குழந்தைகள் தங்களது வாழ்க்கைப் பாதையை தேர்ந்தெடுத்து சமூகத்தில் வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கு வழி வகுப்பது. பள்ளியில் கல்வி பயில இயலாத அல்லது கல்வி பயில வசதி இல்லாத குழந்தைகளை கண்டறிந்து அவர்களை அரசுக்கு தெரிவித்து அல்லது உயர்ந்த மனம் கொண்ட உதவும் குணம் கொண்ட நபர்களுக்கு அறிமுகம் செய்து அவர்களை கல்விப் பயில உதவுவது. தற்காலத்தில் செல்லிடை பேசியில் மூழ்கி எதிர்காலத்தை தொலைக்கும் குழந்தைகளை குறை சொல்லாமல் மகிழ்வான வார்த்தையால் மாற்றம் செய்திடுவது வரை சமூக சேவகர் குழந்தைகளின் உறவு தொடர்கிறது.

# குழந்தைகள் தினவிழாவில் மாணவர்களுக்கு பரிசுகள்: எம்பி வழங்கினார்



வந்தவாசி, நவ 15:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் பண்டித ஜவஹர்லால் நேருவின் 136 ஆவது பிறந்த நாளையொட்டி, குழந்தைகள் தின விழா எரமலூர் வள்ளுவர் நிதி உதவி தொடக்கப் பள்ளியில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு வட்டார கல்வி அலுவலர் ஆர். செந்தமிழ் தலைமை தாங்கினார். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன், வட்டார கல்வி அலுவலர் எம். தரணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியை (பொ) பத்மாவதி வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக, ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தரணிவேந்தன் பங்கேற்று, மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களை வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் இந்த நிகழ்வில் ரெட் கிராஸ் உறுப்பினர்கள் ஜி.விநாயகமூர்த்தி, அ.ஷாகுல்அமீது, திரைப்பட துணை இயக்குநர் முகமது ஜியா உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னதாக , பண்டித ஜவஹர்லால் நேருவின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. மாணவ மாணவியர் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இறுதியில் பள்ளி தாளாளர் சித்தார்த்தன் நன்றி கூறினார்.



பாரத பிரதமர் பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்களுடைய பிறந்த நாளாகிய இன்று, கோவை பெருந்தலைவர் பவனில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தேசிய செயலாளரும் தலைவருமான மயூரா எஸ். ஜெயக்குமார் நேரு அவர்களின் திருஉருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்து இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது, முன்னாள் தேசிய சமூக ஊடகப் பொறுப்பாளர் அஹ்மத்துல்லாவி.ஙி.கி கலந்து கொண்டார் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் அனைவரும் பிறந்தநாள் விழாவில் கலந்து கொண்டனர்.

# நவம்பர் இறுதியில் மீண்டும் பழனிசாமி சுற்றுப்பயணம்

2026 சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி 'மக்களை காப்போம் , தமிழகத்தை மீட்போம்' என்ற பிரச்சாரப் பயணத்தை கடந்த ஜூலை 7ம் தேதி தொடங்கினார். தமிழகம் முழுவதும் இதுவரை 5 கட்டங்களாக நடைபெற்ற தேர்தல் சுற்றுப்பயணத்தில் மொத்தம் 172 சட்டப்பேரவை தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்டார்.

தற்போது மீண்டும் அவர் இம்மாத இறுதியில் தேர்தல் சுற்றுப்பயணத்தை தொடங்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இதுகுறித்து அதிமுகவை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் கூறியது: அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி இதுவரை 5 கட்டங்களாக 172 சட்டப்பேரவைத் தொகுதிகளில் தேர்தல் சுற்றுப்பயணம் செய்து முடித்துள்ளார். இதற்கிடையே தீபாவளி பண்டிகை, வடகிழக்கு பருவமழை உள்ளிட்ட காரணங்களால் தேர்தல் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள முடியவில்லை.

இந்நிலையில், மீதமுள்ள 62 தொகுதிகளில் இம்மாத இறுதியில் தொடங்க திட்டமிட்டுள்ளார். எப்போது இருந்து தொடங்குவது? எந்தெந்த தொகுதிகளில் பிரச்சாரம் மேற்கொள்வது என்பது குறித்த ஆலோசனை நடைபெற்று வருகிறது. விரைவில் இதுகுறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும்.

234 தொகுதிகளிலும் பிரச்சாரம் செய்து முடித்தபின், அடுத்தகட்டமாக அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் மதுரை, கோவை, திருச்சி, வேலூர், விழுப்புரம் ஆகிய 5 இடங்களில் பிரம்மாண்டமான முறையில் மண்டல மாநாடுகளை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# நெல்லை கவின் ஆணவக் கொலை வழக்கில் சுர்ஜித்தின் தாயாரை கைது செய்ய பிடிவாரண்ட்

நெல்லை: நவ.15–

நெல்லை கவின் ஆணவக் கொலை வழக்கில் சுர்ஜித்தின் தாயாரை கைது செய்ய பிடிவாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது. காதல் விவகாரத்தில் நெல்லையில் ஜூலை 27ல் இளைஞர் கவின் ஆணவக் கொலை செய்யப்பட்டார். சுர்ஜித்தின் தாயான உதவி சார்பு காவல் ஆய்வாளர் கிருஷ்ணகுமாரியை கைது செய்ய பிடிவாரண்ட் பிறப்பித்துள்ளது. கவின் ஆணவக் கொலை வழக்கில் ஏற்கெனவே சுர்ஜித், அவரது தந்தை சரவணன், ஜெயபாலன் கைது செய்துள்ளனர். 800 பக்க குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் சுர்ஜித் தாயார் கைது செய்யப்படவில்லை. கவின் ஆணவக் கொலை வழக்கில் சுர்ஜித்தின் தாயாருக்கு தொடர்பு உள்ளதாக அரசு தரப்பில் வாதம் செய்துள்ளது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421